# இடைநிலைப் பாடசாலை மாணவரது கல்வியில் தாக்கம் கொள்ளும் பாடசாலை வளங்கள் பற்றிய ஒரு நோக்கு யாழ். மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

சீலா அருளானந்தம்

## அறிமுகம்

மாணவரது கல்வி அடைவானது பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் வளங்களினாலும், மாணவனது குடும்பப் பின்னணி, பொருளாதாரவளம், தனியாள் வேறுபாடு போன்ற பல்வேறு காரணிகளினாலும் தாக்கம் பெறுகின்றது. இலங்கைப் பாடசாலைகளைக் கருத்தில் கொள்ளும் போது அவை ஐந்து வகைகளாக தேசிய பாடசாலை, 1 AB, 1C, 2, 3 பிரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். ஒரே வகையான பாடசாலைகள் தானும் அவை கொண்டுள்ள வளங்கள் தொடர்பாக ஏதோ ஒரு வகையில் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. இதனால் எந்தப் பாடசாலைகளை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் பொதுத் தேர்வுப் பெறுபேறுகள் ஒரே சீராக அமைவதில்லை. எனவே, பாடசாலை வளங்கள் மாணவரது கல்வியில் எவ்வாறு பங்காற்றுகின்றன என்றும், இவ்வளங்களை மாணவரது அடைவுநோக்கி எவ்வாறு மேம்படுத்தலாம் என்றும் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது. இந்த ஆய்வில் ஆசிரியவளம், கற்பித்தல் துணைச்சாதனங்கள், பௌதிக வளங்கள், நிதிவளம், சமூக பொருளாதார வளங்கள் என்பன எவ்வாறு மாணவரது கல்வியில் தாக்கம் கொள்கின்றன என நோக்கப்படுகின்றது.

## ஆசிரிய வளம்

ஆசிரியர் ஒருவர் வெறுமனே தனது வகுப்பறைப் பாடப் பொருள் அறிவுடன் மட்டும் நின்றுவிடாமல் அதனுடன் இணைந்த வகையில் பரவலான பொது அறிவும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.[1] பாட விசேடத்துவத்துடன் தொடர்பு உடையவராக வகுப்பறையில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் அமைய வேண்டும். கற்பித்தற் பணியில் விருப்பும் ஆர்வமும் கற்பித்தற் கலை ஆளுமையைக் கொண்டவராகவும் அவரது இயல்பு அமைந்திருக்க வேண்டும். அப்போது தான் மாணவர் தாம் கற்கும் பாடவிடயங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ச்சி பெறுவதில் ஆசிரியர் அவர்கட்கு உதவமுடியும்.

ஒரு சில பாடசாலைகளில், கற்பிக்கும் பாடங்களுடன் தொடர்பற்ற வகையில் பொருத்தமற்ற ஆசிரியர்களால் சில பாடங்கள்

கற்பிக்கப்படுகின்றன. க.பொ.த. உயர்தரம் அல்லது பல்கலைக்கழகக் கணிதத்துறையில் கல்வி கற்று வந்த விஞ்ஞான ஆசிரியர்கள் இடைநிலை மட்டத்தில் விஞ்ஞான பாடத்தினைக் கற்பிக்கும் போது ஒன்றிணைந்த விஞ்ஞானத்தில் உள்ள தாவரவியல், விலங்கியல் பாடக்கூறுகளைக் கற்பிப்பதற்குப் பெருமளவுக்கு இடர்ப்பாடுகின்றனர். மேலும், பல்கலைக்கழக தமிழ், வர்த்தகம், சமயம், பொருளியல் போன்ற பாடங்களில் பொது அல்லது சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் சில பாடசாலைகளில் இடைநிலை மட்ட சமூகக்கல்விப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களாக உள்ளனர். சமூகக்கல்வியானது வரலாறு என்னும் பாடத்துடன் இணைந்த வகையில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. எனவே, வரலாறு, சமூகக்கல்வி பற்றிய போதிய அறிவு இவர்களிடம் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. க.பொ.த. உயர்தரம் அல்லது பல்கலைக்கழக மட்டத்தில் வரலாறு, புவியியல் பாடங்களில் புலமை பெற்றிராதவிடத்து இவ்வாசிரியர்களால் வரலாறும் சமூகக்கல்வியும் என்னும் பாடத்திலுள்ள அம்சங்கள் தொடர்பான முழுமையான அறிவை மாணவருக்கு வழங்க முடியாதிருக்கும். மேலும், சமூகக் கல்வியில் புவியியல் தொடர்பான படவேலை பற்றிய அறிவும் தேவைப்படுகின்றது. சமூகக்கல்விப் பாடத்தில் புவியியல் பகுதியைக் கற்பிக்கக் கூடிய அறிவும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்கள் போதியளவுக்கு இல்லாமை இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதன் காரணமாகச் சமூகக்கல்விப் பாடத்திலுள்ள படவேலை தொடர்பான அம்சங்களைக் கற்பிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது.[2] வரலாறு பாடத்தில் புலமை பெற்றிராத ஆசிரியர்கள் சமூகக்கல்வியுடன் இணைந்த வரலாற்றுப் பகுதியினைக் கற்பிக்காது தட்டிக் கழிப்பதும், புவியியலில் புலமை பெற்றிராதவர்கள் புவியியல் பகுதிகளைக் கற்பிக்கும் போது தட்டிக் கழிப்பதும் உயிரியலில் புலமை பெற்றிராத விஞ்ஞான ஆசிரியர்கள் விஞ்ஞான பாடத்திலள்ள உயிரியல் சார்ந்த அம்சங்களைக் கற்பிக்கும் போது தட்டிக் கழிப்பதும் ஆய்வாளர் பல வருடங்களாக நேரிடையாக அவதானித்து வந்த உண்மையாகும். இம்மாதிரியான நிலைமைகளினால் மாணவரது கற்றல் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது போய்விடும். இப்பாடங்கள் தொடர்பாகப் பிரச்சினைகள் இவ்வாறு காணப்படுமாயின் முழுமையான கற்றல் அடைவு தேர்ச்சிகளை மாணவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

போதிய வளங்கள் கொண்ட பாடசாலைகளும், நகர்ப்புறப் பாடசாலைகளும், துறைசார்ந்த வல்லுனரான ஆசிரியர்களைப் போதியளவில் கொண்டிருக்க கிராமப்புறமானதும் வறிய வளம் குன்றியதுமான பாடசாலைகள் பெரும்பாலும் பொருத்தமற்ற வகையில் பாட ஆசிரியர்களைக் கொண்டிருப்பதால் அங்கு மாணவரது கல்வி அடைவு பலவீனமானதாகக் காணப்படுகின்றது. கல்வித் திணைக்களங்கள் தத்தமது பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய வளங்களை நிரப்புதல் செய்யும் போது மேற்குறித்த அம்சங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பாடசாலை அதிபர்கள் ஆசிரியருக்குப் பாடங்கள் ஒதுக்கீடு செய்யும் போது இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். சில கிராமப்புறப் பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கும்போது நகர்ப்புறப் பாடசாலைகள் மேலதிக ஆசிரியர்களைக் கொண்டிருக்கும் நிலையும் ஆய்வாளரினால் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுகளை சீராக்குவதற்கு ஏற்ப ஆசிரிய இடமாற்றங்கள், தகுந்த முறையில் ஏற்படுத்தப்பட வேண்டும். மாணவ வளத்துக்கேற்ப ஆசிரிய வளமும் பங்கிடப்பட வேண்டும். மேலிடத்துச் செல்வாக்குப் பெற்ற சில ஆசிரியர்கள் தொடர்ந்து வசதி மிகுந்த பிரதேசத்திலும், வசதிமிகுந்த பாடசாலைகளிலும் சேவையாற்றிக் கொண்டிருக்க செல்வாக்குப் பெற முடியாத ஆசிரியர்கள் விருப்பத்திற்கு மாறான நிலைய்ல் கஸ்டப்பிரதேசத்திலும், வளம் குன்றிய பாடசாலைகளிலும் சேவையாற்றி வருகின்றார்கள். இதனால் மனநிலை

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிறந்த கற்பித்தற் பணியினை மேற்கொள்ள முடியாது பின்னடிக்கப்படுகின்றார்கள். இதனால் மாணவரது கல்வி அடைவு பாதிக்கப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்று வந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாக யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை ஆய்வுமூலம் அறிய முடிந்தது.[3] யாழ். மாவட்டத்தில் 1995 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக 31.10.1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக கல்வி வலயம் 1 இல் 39.07 வீதமும், கல்வி வலயம் 2 இல் 28.31 வீதமுமான ஆசிரியர் தொகை வீழ்ச்சி காணப்பட்டது. இது தொடர்பான விபரம் அட்டவணை 1, 2 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் வேவையாற்றிய ஆசிரியர்களுள் மொத்தமாக 6761 பேரில் 4506 பேர் தான் மாவட்டத்துள் தங்கியுள்ளனர். அதாவது மொத்தத்தில் 33.3 வீதத்தினர் மாவட்டத்துக்கு வெளியில் அல்லது வேறு நாட்டிற்கு இடம் பெயர்ந்துள்ளனர். ஒரு சிறு தொகையினர்மட்டும் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஆசிரியர்கள் அண்ணளவாக 1/3 பங்கினர் வீழ்ச்சி காணப்படும் போது அது மாணவர் கல்வியில் (கல்வி அடைவில்) பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே தகுந்த ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க வெளிச்சென்ற ஆசிரியர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளை சுமுகமாக ஏற்படுத்த கல்வித் திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மாவட்ட சேவை அடிப்படையில் புதிதாக தகுந்த ஆசிரிய நியமனங்களையும் செய்ய வேண்டும்.

யுத்த அனர்த்தங்கள் காரணமாக யாழ் மாவட்ட ஆசிரியர் தொகையில் வீழ்ச்சி கண்டது போல மாணவர் தொகையிலும் வீழ்ச்சி காணப்பட்டது.[4] 1995.10.31 இல் ஏற்பட்ட யாழ் மாவட்ட மக்களின் இடப்பெயர்வினால் யாழ் கல்வி வலயம் 1இல் 43 வீதமும், கல்வி வலயம் 2இல் 40.3 வீதமுமான மாணவர் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரம் அட்டவணை 3, 4 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை : 1**

**யாழ், கல்வி வலயம் 1 இல் உள்ள ஆசிரியர் வரவு பற்றிய விபரம் 31.10.1997 இல் உள்ளபடி**

| 1995 சூரியபிரகாச நடவடிக்கைக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் கல்வி வலயம் 1இல் இருந்த ஆசிரியர் தொகை | | தற்போதுள்ள ஆசிரியர் | | ஆசிரியர் வீழ்ச்சி | | ஆசிரியர் வீழ்ச்சிக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | தொகை | வீதம்% | தொகை | வீதம்% | |
| 1. யாழ்ப்பாணம் | 791 | 351 | 44.4 | 440 | 55.6 | யுத்த அனர்த்தம் காரணமாக யாழ். மாவட்டத்திற்கு வெளியில் அல்லது வெளிநாட்டுக்கு இடம் பெயர்ந்தமை |
| 2. நல்லூர் | 830 | 471 | 56.7 | 359 | 43.3 | |
| 3. சாவகச்சேரி | 886 | 756 | 85 | 130 | 15 | |
| 4. வேலணை | 268 | 124 | 46.27 | 144 | 53.73 | |
| 5. ஊர்காவற்றுறை | 198 | 107 | 54.04 | 91 | 45.96 | |
| 6. நெடுந்தீவு | 48 | 33 | 68.75 | 15 | 31.25 | |
| 7. பழை | 150 | 90 | 60 | 60 | 40 | |
| மொத்தம் | 3171 | 1932 | 60.93 | 1239 | 39.07 | |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி/ நிர்வாகம்/ 1/ 193, வலயம் –1 கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

அட்டவணை : 2

**யாழ், கல்வி வலயம் 2 இல் உள்ள ஆசிரியர் வரவு பற்றிய விபரம் 6. 10. 1997**

| 1995 சூரியபிரகாசம் இராணுவ நடவடிக்கையின் முன்னர் யாழ். குடாநாட்டில் வலயம் 2இல் இருந்த ஆசிரியர் தொகை (31.10.1995) | | தற்போதுள்ள ஆசிரியர் தொகை (1.9.1997) | | ஆசிரியர் வீழ்ச்சி | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | தொகை | வீதம் | தொகை | வீதம் | |
| 1. மருதங்கேணி | 176 | 122 | 69.5 | 54 | 30.7 | யுத்த அனர்த்தம் காரணமாக யாழ். மாவட்டத் திற்கு வெளியில் அல்லது வெளி நாட்டுக்கு இடம் பெயர்ந்தமை |
| 2. பருத்தித்துறை | 496 | 402 | 81.0 | 94 | 19.0 | |
| 3. கரவெட்டி | 463 | 395 | 85.3 | 68 | 14.7 | |
| 4. கோப்பாய் | 573 | 444 | 77.5 | 129 | 22.5 | |
| 5. உடுவில் | 465 | 317 | 68.2 | 148 | 31.8 | |
| 6. தெல்லிப்பழை | 493 | 296 | 60.0 | 197 | 40.0 | |
| 7. சண்டிலிப்பாய் | 521 | 334 | 64.1 | 187 | 35.9 | |
| 8. சங்கானை | 403 | 264 | 65.5 | 139 | 34.5 | |
| மொத்தம் | 3590 | 2574 | 71.7 | 1016 | 28.31 | |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி/ நிர்வாகம் - 2/ திட்/ 30 வலயம் -2
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

அட்டவணை : 3

**யாழ், கல்வி வலயம் 1 இல் உள்ள மாணவர் வரவு பற்றிய விபரம் 31.10.1997 இல் உள்ளபடி**

| 1995 சூரியபிரகாச நடவடிக்கைக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் கல்வி வலயம் 1இல் இருந்த மாணவர் தொகை | | தற்போதுள்ள மாணவர் | | மாணவர் வீழ்ச்சி | | மாணவர் வீழ்ச்சிக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | தொகை | வீதம்% | தொகை | வீதம்% | |
| 1. யாழ்ப்பாணம் | 24,544 | 11,413 | 46.5 | 13,131 | 53.5 | யுத்த அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்தமை |
| 2. நல்லூர் | 22,532 | 10,871 | 48.2 | 11,661 | 51.8 | |
| 3. சாவகச்சேரி | 25,372 | 18,752 | 74 | 6,620 | 26 | |
| 4. வேலணை | 4,603 | 2,360 | 51.27 | 2,243 | 48.72 | |
| 5. ஊர்காவற்றுறை | 4,003 | 2,797 | 69.87 | 1,206 | 30.13 | |
| 6. நெடுந்தீவு | 1,250 | 1,231 | 98.48 | 19 | 1.52 | |
| 7. பளை | 4,510 | 1,810 | 40.0 | 2,700 | 60.0 | |
| மொத்தம் | 86,814 | 49,234 | 57.0 | 37,580 | 43.0 | |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி/ நிர்வாகம்/ 1/ 193, வலயம் -1
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

**அட்டவணை : 4**

**யாழ், கல்வி வலயம் 2 இல் உள்ள மாணவர் வரவு பற்றிய விபரம் 01. 09. 1997**

| 1995 சூரியபிரகாசம் இராணுவ நடவடிக்கையின் முன்னர் யாழ். கல்வி வலயம் 2இல் இருந்த மாணவர் தொகை (31.10.1995) | | தற்போதுள்ள மாணவர் தொகை (1.9.1997) | | மாணவர் வீழ்ச்சி | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | தொகை | வீதம் | தொகை | வீதம் | |
| 1. மருதங்கேணி | 5116 | 1686 | 33.0 | 3430 | 67 | யுத்த அனர்த்தம் காரணமாக இடப் பெயர்வு |
| 2. பருத்தித்துறை | 16584 | 10356 | 62.4 | 6228 | 37.6 | |
| 3. கரவெட்டி | 19047 | 11231 | 59 | 7816 | 41 | |
| 4. கோப்பாய் | 13703 | 10573 | 77 | 3130 | 23 | |
| 5. உடுவில் | 13988 | 6072 | 43.4 | 7916 | 56.6 | |
| 6. தெல்லிப்பழை | 12031 | 9532 | 79 | 2499 | 21 | |
| 7. சண்டிலிப்பாய் | 15713 | 8365 | 53 | 7348 | 47 | |
| 8. சங்கானை | 14109 | 7827 | 55.5 | 6282 | 44.5 | |
| மொத்தம் | 110291 | 65642 | 59.5 | 44649 | 40.5 | |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி வலயம் - 2/ திட்/ 30, வலயம் -2 கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

யாழ். மாவட்டத்தில் கல்வி கற்று வந்த மொத்த மாணவர் தொகை 1,97,105 பேரில் (வலயம் 1-86, 814, வலயம் 2-11, 091) யுத்த அனர்த்தத்தின் விளைவான இடப் பெயர்வால் 82,229 மாணவர் வீழ்ச்சி (வலயம் 1-37, 580, வலயம் 2-44, 649) காணப்பட்டது. இது மொத்த மாணவரில் 41.7 வீதம் ஆகும். இத்தொகை மாணவ வீழ்ச்சியானது யாழ். மாவட்ட கல்வி வளத்தின் வீழ்ச்சி வீதமாகக் கருதப்படலாம். இதை நிவர்த்தி செய்வதில் கல்வித் திணைக்க ளங்களும், அரசும் முக்கிய பங்காற்ற வேண்டும்.

ஆசிரியர், மாணவர் தொகை வீழ்ச்சி காரணமாக யாழ். மாவட்டத்தின் ஆசிரியர் மாணவர் விகிதத்திலும் பாரிய மாற்றம் காணப்பட்டுள்ளது.

**அட்டவணை : 5 இடம் பெயர்வும் ஆசிரியர், மாணவர் தொகையும்**

| எண்ணிக்கை | 1995.10.31 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் முன்னர் | | | பின்னர் | | |
|---|---|---|---|---|---|---|
| | வலயம் 1 | வலயம் 2 | மொத்தம் | வலயம் 1 | வலயம் 2 | மொத்தம் |
| ஆசிரியர் | 3171 | 3590 | 6761 | 1932 | 2574 | 4506 |
| மாணவர் | 86814 | 110291 | 197105 | 49234 | 65642 | 114876 |
| ஆசிரியர் : மாணவர் விகிதம் | 6761 : 197105<br>1 : 29 | | | 4506 : 114876<br>1 : 25.5 | | |

ஆதாரம் : கோவை இல. யாழ்/ கல்வி நிர்வாகம்/ 1/ 193 வலயம் 1, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், 1998
கோவை இல. யாழ்./ கல்விவலயம் 2/ திட்/ 30, வலயம் 2, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

யுத்த நடவடிக்கையினால் 1995.10.31இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் முன்னர் யாழ். மாவட்டத்தில் ஆசிரிய-மாணவ விகிதம் 1:29 ஆக இருந்தது. மீளக்குடியேற்றத்தின் பின் 1997இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் ஆசிரிய-மாணவ விகிதம் 1:25.5 ஆக காணப்பட்டது. இந்த வீழ்ச்சியானது ஆசிரியரை விட மாணவர் தொகையின் பாரிய வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. எனவே, எமது பிராந்தியத்தில் காணப்படும் யுத்த சூழ்நிலை மாணவரது கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

மேலும், ஆசிரிய இடமாற்றங்களும் மாணவரது கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்து வதைக் காணலாம். உரிய கால இடைவெளி களில் சுழற்சி அடிப்படையில் ஆசிரிய இடமாற்றங்களைக் கல்வித் திணைக்களம் நேர்மையான முறையில் மேற்கொள்ள வேண்டும். இடமாற்ற நடவடிக்கையில் பக்சாதாபம் காட்டக்கூடாது. இளம் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் பின் தங்கிய பாடசாலை களுக்குக் கட்டாய சேவை அடிப்படையில் குறிப்பிட்ட கால வரையறையில் அனுப்பி அவர்களது சேவையைப் பெறலாம். இவர்கள் துடிப்பானவர்களாக இயங்கி சில காலம் இப்பகுதியில் சேவையாற்றி மாணவரது கற்றலை மேம்படுத்தி அவர்களிடமிருந்து சிறந்த அடைவைப் பெற வழியமைக்கலாம். மாணவரது கல்விக்கு குந்தகம் விளையாத வகையில் இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

எந்தவொரு நாட்டினதும் இளம் சந்ததியினர் வளர்ச்சியில் ஆசிரியர்கள் பணி பொறுப்புமிக்கதொன்றாகும். நற்பிரசைகளின் உருவாக்கம் இவர்களது கைகளிலேயே விடப்பட்டுள்ளது. இந்தப் பாரிய பொறுப்பை ஏற்றுச் சேவையாற்றும் ஆசிரியர்களைக் கண்ணியமாக நடத்தவேண்டியது அரசின் பொறுப்பு. அவர்களது வாண்மைவிருத்தி, பதவி உணர்வு, சம்பள உயர்வு, இடமாற்றங் கள், சலுகைகள் போன்ற அம்சங்களில் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டியது அவற்றுக்குப் பொறுப்பானவர்களின் தலையாய கடமையாகும்.

ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்கென்று உலகளாவிய ரீதியில் "ஆசிரியர் தினம்" கொண்டாடப்படுகின்றது. திறன்மிகு ஆசிரியர் கள் பரிசில்களுடன் கௌரவிக்கப்படுகின்றார் கள். அன்று சமூகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஊதியம் குறைந்த தொழில் என அந்தஸ்த்துக் குறைவாக மதிக்கப்பட்ட நிலையில் ஆசிரியத் தொழில் காணப்பட்டது. ஆனால் இந்த நிலைமை இன்று சமூகத்திலி ருந்து மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் களுக்கு ஏற்ற ஊதிய உயர்வை வழங்கியதன் மூலம் ஆசிரியர்கள் சமூக அந்தஸ்தது நோக்கில் உயர்த்தப்பட்டதுடன் ஒரு நாட்டின் இளம் சந்ததியினரது 'வழி காட்டி' என்ற உருவில் பண்டுதொட்டு ஆசிரியர் செயற்பட்டு வந்துள்ளனர்.[5] இவர் நன்முறையில் மாணவனுக்கு வழிகாட்டியாக உள்ளபோது மாணவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாகின் றதுடன் மாணவரது பூரண வளர்ச்சியிலும், பாடசாலை வளர்ச்சியிலும் உறுதுணையுடைய வராகின்றார். எனவே ஆசிரியரின் பயனுள்ள கற்பித்தல் செயற்பாட்டின் விளைவாக மாணவரது கல்விப் பெறுபேறு திருப்தி பெறுகின்றது.

ஆசிரியர்கள் போதிய வாண்மைவிருத்தி பெறுவதற்கேற்ப சேவை முன் பயிற்சிகள், சேவைக்காலப் பயிற்சிகள், வழிகாட்டல்கள், தொழிற்பயிற்சிகள் போன்றன அவ்வப்போது வழங்க வேண்டியது கல்வித்திணைக்களங்க ளின் பொறுப்பு ஆகும். இப்பயிற்சிக்காலங் களில் ஆசிரியரது கற்பித்தல் சார்பாக எதிர்நோக்கிய பிரச்சினைகள், சந்தேகங்கள் போன்றன கலந்துரையாடப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். சேவைக் காலப் பயிற்சிகளானவை ஆசிரியரது அறிவு வளத்தைப் பெருக்குவதாகவும் செய்யும் தொழிலில் திருப்தி, நம்பிக்கை ஊட்டுவ தாகவும், வாண்மையை மெருகூட்டுவதாகவும் அமைய வேண்டும். தொழிற் பயிற்சிகள்

வழங்கப்படும் போது கற்பித்தற் பயிற்சிகளுக்குக் கூடிய முக்கியத்துவமும் இடமும் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு ஆசிரியவாண்மையானது உயர்வு பெறும் போது பாடசாலை மட்டத்திலும் மாணவரது கல்வி அடைவானது உயர்வடையும்.

எனவே, பாடசாலைகளிடையே ஆசிரிய வளம் போதியளவுக்குப் பரவலடையச் செய்வதும், போதிய தகைமையுடையவர்களையே ஆசிரியத்தொழிலுக்கு நியமனம் செய்வதும், ஆசிரியவாண்மைவிருத்திக்கேற்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதும், ஆசிரியர்களைக் கண்ணியமாக நடத்துவதும் கல்விப் பகுதிக்குப் பொறுப்பானவர்களின் கடமையாக வேண்டும். அப்போதுதான் மாணவரிடத்தும் கூடிய கல்வி அடைவைப் பெற முடியும்.

## கற்பித்தல் துணைச் சாதனங்கள்

கற்பித்தல் - கற்றல் செயற்பாடானது ஆசிரியர் என்னும் அறிவு முதலிடத்துக்கும் மாணவர் என்னும் அறிவைப் பெறுபவருக்குமிடையே நிகழும் இருவழிச் செயற்பாடாகிய தொடர்பாடல் எனப்படுகின்றது. இத்தொடர்பாடல் செயற்பாடானது நன்முறையில் சமநிலையடைய வேண்டின் தொடர்பாடலுக்கான செய்தியானது பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்டு கடத்தப்பட வேண்டும். கடத்தப்பட்ட செய்தியும் செய்தியைப் பெறுபவரினால் பெறப்பட்ட செய்தியும் ஒரே அளவாகும் போது தொடர்பாடல் வெற்றியாகின்றது.[6]

இங்கு செய்தி எனக் கருதப்படுவது ஆசிரியரால் கற்பிக்கத் தெரிவு செய்யப்பட்ட பாட அம்சம் ஆகும். இந்த அம்சமானது மாற்றமடையாது மாணவரைச் சென்றடைய வேண்டின் அதைப் பொருத்தமான ஊடகமூடாக வடிவமைத்து அனுப்ப வேண்டும். இந்த வடிவமைத்தல் செயற்பாட்டில் கற்பித்தல் முறையின் தெரிவும் கற்பித்தல் துணைச்சாதனங்களின் தெரிவும் முக்கிய இடம் பெறுகின்றது. கற்பித்தல் துணைச் சாதனங்கள் கற்பித்தல் - கற்றல் விடயம் தொடர்பாக உணர் அனுபவங்களை வழங்குபவையாகும். இவை கட்புல செவிப்புல சாதனங்கள் எனவும் வழங்கப்படுகின்றன. இவற்றை கட்புல சாதனங்கள், செவிப்புல சாதனங்கள், கட்புல - செவிப்புல சாதனங்கள், பல் உணர்வு சாதனங்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.[7]

கற்பித்தல் துணைச்சாதனங்களாகப் பொதுவாக ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுபவை கரும்பலகை, வெண்கட்டி, பாடநூல் என்பவையே ஆகும். சிலர் பாடநூலுடன் மட்டுமே நின்றுவிடுவார்கள். இவ்வாசிரியர்களினால் மாணவரிடத்து சிறந்த முறையில் செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இதனால் மாணவரது அடைவு பாதிக்கப்படும். சமூகக்கல்விப் பாடவேளையில் உலகப் படம், இலங்கைப்படம், காலநிலை அளக்கும் கருவிகள் போன்றவற்றின் அவசியமும், விஞ்ஞான பாடவேளைகளில் செய்து காட்டல், பரிசோதனைகள் செய்தல் போன்றவற்றுக்கான சாதனங்களும், சமய பாடவேளைகளில் பொருத்தமான படங்கள், நாடா பதிவு கருவிகள் (இசையுடன் கீதம்). போன்றனவும் கணித பாடவேளைகளில் கரும்பலகை, நேர்விளிம்பு, கேத்திரகணித உருவங்கள் போன்றனவும் அவ்வப்போது கற்பிக்க உதவும் கற்பித்தல் துணைச்சாதனங்களேயாகும். இவற்றுடன் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, படமெறிகருவி, ஒலித்தட்டு, இணக்கல் உபகரணங்கள் போன்றனவும் அடங்கும்.

சுற்றுலாவின் போது குளங்கள், கோவில்கள், தொழிற்சாலைகள், வயல்கள், பூந்தோட்டம் போன்றனவும் வகுப்பறைக் கற்பித்தலின்போது விலங்குகள், தாவரங்கள், மண் வகைகள் போன்றனவும் உண்மைப் பொருட்களாகப் பயன்படும் கற்பித்தல் சாதனங்கள் ஆகும். பூகோளம், கோள்நிலையம் போன்றனவும் கண், இதயம், சிறுநீரகம்

போன்றவற்றின் மாதிரிப் பொருட்களும் உண்மைப் பொருளை ஒத்த ஆனால் உருவில் சிறிய/ பெரிய அமைப்புகள் ஆகும். இவை மாதிரிப்பொருட்கள் எனப்படும். உண்மைப் பொருட்களைப் பெற முடியாதபோது மாதிரிப்பொருட்களும், மாதிரிப்பொருட் களைப் பெற முடியாதபோது படங்கள் கோட்டுப் படங்கள் போன்றவைவும் பயன் படுத்திக் கற்பிக்கலாம். ஆனால் உண்மைப் பொருட்கள், கூடிய கற்றல் அனுபவங்களைத் தரக்கூடியன. பல்வேறு புலன்களுடாகவும், மாணவர் அனுபவம் பெறக்கூடிய வகையில் துணைச் சாதனங்களின் தெரிவு அவசியமாகின்றது.

சமூகக்கல்வி, விஞ்ஞானம், விவசாயம், மனைப்பொருளியல் போன்ற பாடங்களுக்கு ஆய்வுகூடங்கள் அவசியம். வகுப்பறையில் மேற்கொள்ள முடியாத செயற்பாடுகளுக்கு ஆய்வுகூடங்கள் பெரிதும் துணைபுரியும். கற்பித்தல் துணைச்சாதனங்களை வைத்துப் பேணுவதிலும் இவை முக்கியம் பெறுகின்றன.

யாழ். மாவட்டத்தில், குறிப்பாக யாழ். கல்விக் கோட்டத்திலும் நல்லூர் கல்விக் கோட்டத்திலும் தற்போதைய விஞ்ஞான ஆய்வுகூடவசதிகளை நோக்கிய போது, யாழ். கல்விக் கோட்டத்தில் இயங்கும் 23 பாடசாலைகளில் 10 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூட வசதி உண்டு. 13 பாடசாலைகளில் ஆய்வுகூடம் இருந்தும் ஆய்வு கூட உபகரணங்கள் இன்றிக் காணப்படுகின் றன. நல்லூர் கல்விக்கோட்டத்தில் இயங்கும் 38 பாடசாலைகளில் 24 பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் உண்டு. 10 பாடசாலைக ளில் உபகரணவசதிகள் இன்றிக் காணப் படுகின்றன. 4 பாடசாலைகளில் ஆய்வுகூட கட்டடம் அழிந்த நிலையில் காணப்படுகின் றது.[8] உபகரண வசதிகள் இன்மைக்கும், கட்டடங்களின் அழிவுக்கும் போர்க்காலச் சூழலே காரணமாக அமைந்தது. இவ்வாறு ஆய்வுகூட வசதிகள் அற்றுப்போன பாடசாலை மாணவரது விஞ்ஞான பாடக்கற்கையானது, ஆய்வுகூட வசதிகளுள்ள பாடசாலை மாணவரது விஞ்ஞான பாடக்கற்கையிலும் பார்க்கக் குறைந்த வாய்ப்பு நிலைமையைக் கொண்டு காணப்படுவது தெரிகின்றது.

தேவையான கற்பித்தல் சாதனங்கள், ஆய்வுகூடங்கள் எல்லாப் பாடசாலைகளுக்கும் கிடைக்கக் கூடியவாறு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட வேண்டும். வசதி படைத்த பாடசாலைகள் மட்டும் வசதிகளை அனுபவிக்க வசதி குறைந்த பாடசாலைகள் தொடர்ந்தும் பின்னடைந்து போவது தடுக்கப்பட வேண்டும். எல்லாப் பாடசாலைகளிலும் துணைச் சாதனங்களுடனான கற்பித்தலை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். செய்முறைகளுடனும் கற்பித்தல் துணைச் சாதனங்களுடனுமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்கும்போது மாணவரது அடைவு உயர்கின்றது என்பது முன்னர் ஆய்வொன்றின் மூலம் அறியப் பட்டுள்ளது.[9]

கற்பித்தல் துணைச்சாதன வசதிகளை, தொடர்பான ஆசிரியர்கள் பெறும் வண்ணம் பாடசாலை அதிபர்கள் வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவற்றினைப் பயன்படுத்தி மாணவரிடையே உணர் அடைவைப் பெற ஆசிரியர்கள் முயற்சிகள் செய்ய வேண்டும்.

## பௌதீக வளம்

பாடசாலைகளின் பௌதிக வளங்க ளான காணி, கட்டிடம், தளபாடம், நூலகம், விளையாட்டு மைதானம், கிணறு, மலசலகூடம் போன்றன காணப்படுகின்றன. இப்பௌதிக வளங்களின் செறிவு பாடசாலைகளுக்குப் பாடசாலை வேறுபாடு கொண்டதாகக் காணப்படுகின்றது. இவ்வளங்கள் தொடர்பாக நோக்குகின்ற போது சில பாடசாலைகள் நிறைந்த வளத்துடனும், சில பாடசாலைகள் குறைந்த வளத்துடனும் உள்ளன. இத்தகைய வளங்கள் மாணவரது கற்றல் நடவடிக்கை களுக்குக் குந்தகமாகக் (வசதியற்றுக்)

காணப்படும் போது வழமையான கற்றல் இடமாற்றம் இடம் பெறுவதற்கான உடலியல், உளவியல் சூழல் கிடைக்கப் பெறாது அவர்களது கல்வி அடைவு பின்னடைய நேரிடும். இப்பௌதிக வளங்களின் பற்றாக் குறை ஆசிரியரது கற்பித்தல் நடவடிக்கை களுக்கும் உறுதுணையாக அமையாது போய்விடுகிறது.

இவ்வாறான பற்றாக்குறையானது அனேகமாகக் கிராமப்புற, கரையோரப்புற அமைவிடங்களில் உள்ள பாடசாலைகளில் பெரிதும் காணப்படுகின்றது. பொது மண்டபம், விஞ்ஞான ஆய்வகம், நூலகம், மலசலகூடம், தேனீர்ச்சாலை, ஆசிரியர் தங்கும் அறை போன்றன பெரும்பாலான இப்பாடசாலைகளில் இல்லை எனலாம். ஆனால் நகர்ப்புறப் பாடசாலைகளில் இவ்வசதிகள் பெரும்பாலும் உண்டு. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கரையோர, கிராமப்புறப் பாடசாலைகளில் கட்டிடங்கள், தளபாடங்கள் என்பனவும் ஏனைய பௌதிக வளங்களும் யுத்த அனர்த்தங்களால் பெருமளவுக்குப் பாதிக்கப் பட்ட நிலையில் காணப்படுகின்றன.

யாழ். கல்விக்கோட்டத்தில் உள்ள 23 பாடசாலைகளுள் 11 பாடசாலைகள் வளம் குறைந்த பாடசாலைகளாகக் காணப்படுகின் றன. இவற்றுள் 9 பாடசாலைகள் கரையோரப் பாடசாலைகள் ஆகும். கரையோரப் பாடசாலைகளுள் 5 பாடசாலைகள் யுத்த அனர்த்தங்களால் கட்டடங்களின் பகுதி அழிவுற்ற நிலையில் உள்ளன. இதே போல் நல்லூர் கோட்டத்திலுள்ள 38 பாடசாலை களுள் 27 பாடசாலைகள் வளம் குன்றியவை யாகக் கருதப்படுவதுடன் 12 பாடசாலைகள் கட்டடங்கள் பகுதி அழிவுற்ற நிலையிலும் உள்ளன.[10] இவ்வாறான பாடசாலைகளில் மாணவர் மரநிழலிலும், தற்காலிக கொட்டகைகளிலும் புற்தரைகளிலும் இருந்து கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது. இடம்பெயர்ந்த பாடசாலைகளில் இந்நிலைமை மேலும் மோசமடைந்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகி ன்ற பாடசாலைகளை நோக்கின் 1995இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் வலயம்-1 இல் (31.10.1997இல் உள்ளபடி) 81.1 விதமான பாடசாலைகளும் வலயம்-2 இல் 93 விதமான பாடசாலைகளும் மட்டுமே தற்போது இயங்கு கின்றன.11 இவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 6, 7 ஆகியவற்றில் காட்டப் படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் உள்ள 502 பாடசாலைகளுள் 62 பாடசாலைகள் இயங்காமல் உள்ளன. அதாவது 12.4 விதமான பாடசாலைகள் யுத்த அனர்த்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வி னால் இயங்காமல் உள்ளன. 87.6 வீத பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன.

அட்டவணை : 6

**யாழ், கல்வி வலயம் 1 இல் உள்ள இயங்கும் பாடசாலைகள் பற்றிய விபரம் 31.10.1997 இல் உள்ளபடி**

| 1995 சூரியபிரகாச நடவடிக்கைக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் கல்வி வலயம் 1இல் இயங்கிய பாடசாலைகள் தொகை கோட்ட ரீதியாக | | தற்போது இயங்குகின்ற பாடசாலைகள் | | தற்போது இயங்காமல் உள்ள பாடசாலைகள் | | பாடசாலைகள் இயங்காமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | தொகை | வீதம்% | தொகை | வீதம்% | |
| 1. யாழ்ப்பாணம் | 32 | 24 | 75 | 08 | 25 | யுத்த அனர்த்தம் காரணமாக இடப்பெயர்வு |
| 2. நல்லூர் | 40 | 40 | 100 | — | — | |
| 3. சாவகச்சேரி | 66 | 65 | 98.48 | 01 | 01.52 | |
| 4. சாவக்கச்சேரி | 34 | 15 | 44.1 | 19 | 55.9 | |
| 5. ஊர்காவற்றுறை | 32 | 18 | 56.25 | 14 | 43.75 | |
| 6. நெடுந்தீவு | 10 | 10 | 100 | — | — | |
| 7. பளை | 13 | 12 | 92.30 | 01 | 07.7 | |
| மொத்தம் | 227 | 184 | 81.10 | 43 | 18.90 | |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி நிர்வாகம்/ 1/ 193, வலயம் -1
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

அட்டவணை : 4

**யாழ், கல்வி வலயம் 2 இல் இயங்கும் பாடசாலைகள் பற்றிய விபரம் 01. 09. 1997**

| 1995 சூரியபிரகாசம் இராணுவ நடவடிக்கையின் முன்னர் யாழ். கல்வி வலயம் 2இல் இயங்கிய பாடசாலைகள் தொகை கோட்ட ரீதியாக (31.10.1995) | | தற்போது இயங்குகின்ற பாடசாலைகள் | | | | தற்போது இயங்காமல் உள்ள பாடசாலைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | தொகை | சொந்த இடத்தில் | வேறு இடத்தில் | மொத்தம் | வீதம்% | தொகை | வீதம்% |
| 1. மருதங்கேணி | 19 | 12 | 05 | 17 | 89 | 02 | 11 |
| 2. பருத்தித்துறை | 33 | 31 | 02 | 33 | 100 | — | — |
| 3. கரவெட்டி | 32 | 31 | 01 | 32 | 100 | — | — |
| 4. கோப்பாய் | 43 | 34 | 07 | 41 | 95 | 02 | 05 |
| 5. உடுவில் | 33 | 28 | 02 | 30 | 91 | 03 | 09 |
| 6. தெல்லிப்பழை | 42 | 13 | 18 | 31 | 74 | 11 | 26 |
| 7. சண்டிலிப்பாய் | 41 | 34 | 06 | 40 | 98 | 01 | 02 |
| 8. சங்கானை | 32 | 30 | 02 | 32 | 100 | — | - |
| மொத்தம் | 275 | 213 | 43 | 256 | 93% | 19 | 07% |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்வி வலயம் - 2/ திட்/ 30, வலயம் -2
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

வலயம் - 2இல் உள்ள 275 பாடசாலைகளுள் மட்டும் 256 பாடசாலைகளே இயங்குகின்றன. இவற்றுள் 213 பாடசாலைகள் தமது சொந்த இடத்திலேயே இயங்குகின்றன. 43 பாடசாலைகள் தமது சொந்த இடத்திலில்லாது இடம் பெயர்ந்து வேறு இடத்தில் இயங்குகின்றன. வேறு இடத்தில் இயங்குவன வற்றிலும் சில பாடசாலைகள் வேறு பாடசாலைடனும், சில தற்காலிக கொட்டகைகளிலும் சில தனியார் காணிகளிலும் இயங்குகின்றன.

இவை தொடர்பான விபரம் அட்டவணை 8இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை : 8 வலயம் - 2 இல் இயங்கும் பாடசாலைகள் பற்றிய விபரம்**

| பாடசாலைகளின் முழுத்தொகை | தற்போது இயங்கும் பாடசாலைகள் | | | | இயங்காத பாடசாலைகள் |
|---|---|---|---|---|---|
| | சொந்த இடத்தில் இயங்குபவை | வேறு இடத்தில் இயங்குபவை | | | |
| | | வேறு பாடசாலையுடன் | தற்காலிக கொட்டகையில் | தனியார் காணியில் | |
| 275 | 213 | 24 | 06 | 13 | 19 |

ஆதாரம் : கோவை இல. யாழ்./ கல்விவலயம் 1/ திட்/ 30, வலயம் 2, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் 1998.

இவ்வாறான இடம் பெயர்ந்த நிலையில் வேறு இடத்தில் இயங்கும் பாடசாலை மாணவர்களது கல்வியானது பாதிப்படைந்த நிலையிலேயே காணப்படும்.

வழமையான சூழல் ஏற்படும் வரை தற்காலிக கொட்டகைகளையேனும் மேலும் அமைத்து மாணவர் கற்பதற்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அரச உதவிகள் பாடசாலைகளுக்குக் கிட்டும் வரையிலாவது பெற்றோர், நலன் விரும்பிகள், வெளிநாட்டு நிறுவனங்கள் போன்றவற்றின் உதவிகளைப் பெற்று பாடசாலை அபிவிருத்தி சபைகள் இவ்வாறான இடப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். வருடாந்த நிதி ஒதுக்கீட்டை கல்வித் திணைக்களங்கள் மேற்கொள்கின்ற போது இவ்வாறு கஷ்டப்படும் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். வளங்குன்றிய பிரதேசங்களையும் வளமாக்க முயல்வது அரசினதும் சமூகத்தினதும் பொறுப்பான நிறுவனங்களினதும் முதல் நோக்கமாக இருக்க வேண்டும்.

சட்டிடங்கள், தளபாடங்கள், ஆய்வு கூடங்கள், நூலகம், விடுதி வசதி, நீர் வழங்கல், சுகாதாரவசதி என்பன பாடசாலைச் சூழலுக்கு இயைந்தவாறு காணப்படும் போது கற்றல், கற்பித்தல் வினைத்திறன் மேலும் சிறந்ததாக அதிகரிக்கப்படும்.[12] ஒரு பாடசாலைச் சூழலில் கட்டிடங்கள் மட்டும் இருந்தால் போதாது. தளபாடங்கள் மாணவரது வயது, பருமன், எண்ணிக்கை என்பனவற்றுக்கேற்ப பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். இன்றேல் கற்றல் செயற்பாட்டிற்கு அசௌகரியங்கள் ஏற்பட்டு அது மாணவர் அடைவிலும் தாக்கம் விளைவிக்கும். பாடசாலைகளிலும் தளபாடப் பற்றாக்குறை உள்ள போது அரச நிதியை மட்டும் எதிர் நோக்கியிராது, தமது பாடசாலை வளங்களைப் பயன்படுத்தியும் இக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம். கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவினால் பாடசாலைகளிலுள்ள கட்டிடங்கள், தளபாடங்கள் பற்றாக்குறைகள் காலா காலம் ஆராயப்பட்டு அதைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலைகளில் நூலக வசதிகள் காணப்படும் போது அது கற்பித்தல் கற்றல் செயற்பாட்டுக்கும் துணை வசதியாகக் காணப் படும். மாணவர் கற்றலில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது நூலகத்தினைப் பயன்படுத்தி விளக்கம் பெற முடியும். மாணவரது வாசிப்புத்திறன், சிந்தனை, ஆராய்வூக்கம், படைப்பாற்றல் போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் சிறந்த ஒரு நூலகம் துணை நிற்கின்றது. மேலதிக நேரங்களைப் பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் மாணவருக்கு நூலகம் உதவும். இங்கு கிடைக்கப் பெறும் நூல்கள் மாணவருக்குப் பொருத்தமானவையாக அமையும் வண்ணம் கவனிக்கப்பட வேண்டியது பாடசாலை நிர்வாகிகளினதும் ஆசிரியர்களினதும் பொறுப்பு ஆகும். மாணவரது நூலகப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும் போது அவர்களது அறிவுக்கான தேடல் விரத்தி பெற்று அவர்களது அடைவிலும் முன்னேற் றம் காணப்படும். யாழ். மாவட்டத்தில் நூலக வசதிகள் கொண்ட பாடசாலைகளுள் பெரும் பாலானவை நகர்ப்புறப் பாடசாலைகளாகும். இந்த நூலக வசதிகளை ஏனைய பாடசாலைகளுக்கும் பொருத்தமான அளவில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உ-ம் யாழ். கல்விக்கோட்டத்திலேயே 23 பாடசாலைகளுள் 10 பாடசாலைகளில் நூலகம் வசதியாக உண்டு. ஒரு பிரபல நகரப் பாடசாலையில் நூலகம் இருந்தும் யுத்த அனர்த்தத்தினால் நூல்கள் அற்றுப்போயின. 12 பாடசாலையில் நூலகமே இல்லை.[13] இவை கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் ஐயமில்லை.

## நிதி வளம்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கல்வி அபிவிருத்திக்கும் நிறைவான நேர் தொடர்பு காணப்படுகின்றது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு இவை இரண்டினதும் தொடர்பும் இணைப்பும் அவசியமாகின்றது.[14]

பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் இவற்றுக்கான நிதிவளம் அதிகரிக்கும் போது அங்கு காணப்படும் ஏனைய வளங்களின் தரமும் அதிகரிப்பது கண்கூடு. தனியார் பாடசாலைகளும், தேசிய பாடசாலைகளும் நிதிவளம் தொடர்பான பிரச்சினைகளை அதிகம் கொண்டிருப்பதில்லை. புதிய மாணவர் அனுமதி, மத்திய அரசின் நேரடித் தொடர்பு என்பன முறையே மேற்படி பாடசாலைகளுக்குப் போதிய நிதிவளத்தைப் பெற்றுக் கொடுக்கும். நகர்ப்புற 1AB, 1C பாடசாலைகளுக்கும் ஓரளவு நிதிவளம் பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றது. இப்பாடசாலைகள், பழைய மாணவர் சங்கம், லியோ, இன்றறக்ற் போன்ற கழகங்கள், சாரணர் இயக்கம், முதலுதவிப் படை, கலை நிகழ்ச்சிகள், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு, பாடசாலை அபிவிருத்திச் சபை என்பவற்றின் மூலம் ஓரளவுக்கு தமது நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. பெரிய பாடசாலை கள் தமது செயற்பாட்டால் தாம் ஏற்படுத்திக் கொண்ட புகழும் கூட இந்நிதி வளப் பெருக்கத்துக்குக் காரணமெனலாம். பழைய மாணவர் சங்கமும் பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருவது இன்றைய கால கட்டத்தில் பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சிறிய பாடசாலைகள் போதிய நிதிவசதி கொண்டிருப்பது மிகவும் அரிது. இப்பாடசா லைகள் பெரும்பாலும் மாணவரது வசதிக் கட்டணம், பாடசாலை அபிவிருத்திச்சபை என்பன மூலம் பெறப்படும் பணம் போன்றவை தவிர நிதி திரட்டும் ஏனைய பக்க நடவடிக்கை களை மேற்கொள்வது குறைவு. பாடசாலையை அபிவிருத்தி செய்வது என்றால் தனித்து அரசை மட்டும் நம்பியிராது சமூகத்தின் ஒத்தாசைகளைப் பெறும் முயற்சிகளிலும் பாடசாலைகள் ஈடுபட வேண்டும். மாணவர் கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாடசாலையில் கிடைக்கப் பெறும் நிதிவளமானது மாணவர் அடைவில் பெரும் தாக்கம் கொள்வது வெளிப்படையாக உள்ளது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை யில் அரசியல் சூழல் குழப்பம் மிகுந்ததொன்றாகக் காணப்படுவதால் இப்பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் அரசு பாரபட்சம் காட்டுவது கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இதனால் சுயநிதிவளப் பெருக்கக் கூடிய முறைகளைக் கையாளும் பாடசாலைகள் தவிர அரசை மட்டும் நம்பி வாழும் பாடசாலைகளின் வளர்ச்சியில் மந்த போக்கே காணப்படுகின்றது. இதனால் மாணவரும் சிறந்த பெறுபேறுகளைக் காட்டுவதில்லை. எனவே ஒரு பாடசாலையின் வள அதிகரிப்பில் அரசு மட்டும் அல்லாமல் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர், சமூகம் என்ற வகையில் எல்லோரும் ஒத்துழைப்பை நல்கும் போது மாணவரது அடைவு உயர்த்தப்படும்.

## சமூக – பொருளாதாரக் காரணிகள்

பெற்றோரது குடும்பப் பின்னணி, சமூகக் காரணிகள் என்பனவும் பாடசாலையின் ஏனைய வளங்களுடன் சேர்ந்து பிள்ளைகளது அடைவில் தாக்கம் ஏற்படுத்துகின்றமையைக் காணலாம். வளம் குன்றிய பாடசாலைகளில் கற்கும் மாணவரைக் கருத்தில் கொண்டால் இவர்களது பெற்றோரின் சமூகப் பின்னணி பெரும்பாலும் வறுமைக்கோட்டின் கீழ் காணப்படுவது தெரிகின்றது. இப் பெற்றோர் பெரும்பாலும் அரச ஊதியம் அற்றவர்களாகவோ, போதிய கல்வி கற்காதவர்களாகவோ, தொழிலாளர்களாகவோ இருந்து பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களாக உள்ளனர். இப்பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வியில் காட்டும் ஊக்கமும் குறைவு. இது பற்றிச் சிந்திக்கும் ஆற்றலோ அவகாசமோ கூட இவர்கட்கு இருப்பதில்லை. தம் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில்லை. வீட்டில் உதவிக்கோ அல்லது பெற்றோருடன் தொழிலுக்குக் கூட்டிச் செல்வதிலோ காட்டும் அக்கறை, தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் காட்டுவதில்லை. இவ்வாறான பிள்ளைகளினது உளநிலையும் ஏனைய சாதாரண மாணவரது உளநிலையை விட வேறுபட்டதாகவே உள்ளது.

இவ்வாறான சமூக அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து கல்வி வளர்ச்சியில் காட்டும் அக்கறைதானும் இங்குள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு மந்தமாகவே காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளைக் களைந்தெறிந்து பிள்ளைகளது கல்வி வளர்ச்சியில் பாடசாலை, பெற்றோர், சமூகம் என்பன அக்கறை காட்டாது விட்டால் சமூக வளர்ச்சி பின் தள்ளப்படும். இப்பகுதியிலுள்ள பெற்றோரைப் பாடசாலைக்கு அழைத்துக் கல்வி விருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள், ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் இவர்களைப் பாடசாலை சமூகம் என்ற கட்டுக் கோப்பினுள் இணைக்கலாம். இவர்களது ஆலோசனைகளைப் பெறும் வகையில் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை மாற்றி அமைக்கலாம்.

பணவசதி படைத்த பெற்றோர் பெரும்பாலும் தேசிய, நகர, தனியார் பாடசாலைகளுக்குத் தம்பிள்ளைகளை அனுப்பி வைக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இப்பாடசாலைகளில் ஆசிரிய வளங்களும், ஏனைய வளங்களும் நிறைந்து காணப்படுவதாலும், இப்பாடசாலைகளில் தம்பிபிள்ளைகள் கற்கிறார்கள் என்ற புகழுக்காகவும் கூட இப்பாடசாலைகளில் அனுமதி பெற ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் ஏனைய பாடசாலைகளுக்கான மாணவ வளமும் கூட அருகிப் போகின்றது. புகழ்பூத்த பாடசாலைகளில் மாணவவளம் செறிவாக உள்ளபோது அவர்களின் ஆற்றல் வீச்சும் பரந்ததாகின்றது. இதனால் இப் பாடசாலைகளின் தேர்வுப் பெறுபேறுகளும் பரந்த வீச்சில் உயர்ந்ததாகக் காணப்படுகின்றது. இப்பாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொள்ள முடியாத நிலையில் வளம் குன்றிய பாடசாலைகளது அடைவு காணப்படுகின்றது. எனவே, சமூக-பொருளாதாரக் காரணிகள் கூட மாணவரது

கல்வியிலும் அவர்களது அடைவிலும் பெரும் தாக்கம் விளைவிக்கின்றமை காணப் படுகின்றது.

## முடிவுரை

கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு வளங்களைப் பகிர்ந்தளிக்கும் போது வளப்பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். இளம் சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் அவர்களது மனதில் கசப்புணர்வுகள் உருவெடுக்காத வகையில் அறிவை வளர்க்க வசதிகள் செய்யப்பட வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சமுகம் என்பவற்றுக்கிடையே ஆரோக்கியமான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இவர்களுடன் பாடசாலையின் ஏனைய வளங்களும் நன்முறையில் ஒன்றிணைவாக அமையும் போது பாடசாலைகள் அபிவிருத்தியடைந்து மாணவரது கல்வியும் உயர்நிலைக்கு வளர்ச்சி பெறும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போர்க்காலச் சூழ்நிலைமைகளினால் பல பாடசாலைகள் இடம் பெயர்ந்தும், தற்காலிக கட்டடங்களில் அமைந்தும் இயங்காமலும் உள்ளன. தமது பழைய இடத்தில் இயங்கும் பல பாடசாலைகள் தானும் வளங்கள் அழிந்த நிலையில் உள்ளன. பெருமளவிலான ஆசிரியர்களும் மாணவர்களும் இடம் பெயர்ந்துள்ளமையினால் இங்கு ஆசிரிய, மாணவ வளங்கள் பாடசாலைகளில் குன்றிக் காணப்படுகின்றன. போக்குவரத்து நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கும் தடங்கல்களினால் ஆசிரியர்களும் மாணவர்களும் உரிய நேரத்துக்குப் பாடசாலை செல்ல முடிவதில்லை. இக்காரணிகளும் மாணவரது கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கோட்டங்களுக்கிடையேயுள்ள பாடசாலைகளிலும் கோட்டங்களுக்குள்ளே உள்ள பாடசாலைகளிலும் மாணவரது கல்வி வாய்ப்பில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

ஆகவே மேற்குறித்த கல்வியுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களும் சீர்தூக்கப்பட்டு ஈடு செய்யப்படும் போதே மாணவரது கல்வி அடைவிலும் ஏற்றம் காணமுடியும்.